**OS No.1/2023**
DW 2 - பூமிநாதன்

நாள் 05.03.2026

**பி.வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விசயங்களை வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். வாதிகள் என்ன பரிகாரம்கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும்.

வாதிகளிடம் எனக்கு நேரடி பேச்சு வார்த்தை உண்டு. வாதிகள் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 29.02.2022 அன்று வசதியுரிமை கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

இந்த வழக்கில் சாட்சியம் அளித்துக்கொள்ள எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிகள், பிரதிவாதிகளை எனக்கு நேரடியாகத் தெரியும். தாவா சொத்துக்கள் ஆரம்ப காலத்தில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுடைய முன்னோரான வெள்ளைய கோனாருக்கு பாத்தியப்பட்டது என்பது எனக்குத் தெரியும்.

வழக்கு சொத்தின் சர்வே எண் 340/11 ஏ, மற்றும் 340/11 பி ஆகும். மேற்படி சொத்தின் விஸ்தீரணம் மற்றும் வருவாய் துறை ஆவணத்தில் யார் பெயரில் பட்டா உள்ளது என்பது தெரியாது. தாவா வழக்கின் 1 ம் இலக்க சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 340 ல் ஏ ஆகும்.

நிரூபண வாக்குமூலத்தில் நான்குமாலில் 10 அடி பாதை என்று குறிப்பிட்டுள்ளதில் தார் சாலையுள்ளதா அல்லது கிராவல் ரோடு உள்ளதா என்றுகுறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் வாய்க்கால் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

தாவா 1 ம் இலக்க சொத்திற்கு செல்வதற்கு வருவாய்துறை ஆவணத்தில் பாதை உள்ளதா என்றால் இல்லை. வாதிகளோ, பிரதிவாதிகளோ எனக்கு உறவினர் இல்லை. 3 ம் தரப்பினர் தான். வாதிகள் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகள் வாதிகளை பாதையாக

பயன்படுத்தக்கூடாது என்று தடுத்ததாக மானாமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

நிரூபண வாக்குமூலத்தில் வெங்கு மகன் அழகு என்பவர் 20 வருடங்களுக்கு முன்பு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்பது எந்த சர்வே எண் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சர்வே எண் 340 ல் ஏ, பி – ல் குடியிருந்து வருகிறார்.

1 ம் வாதி அழகு ஏற்கனவே காவல் துறையில் 35 ஆண்டுகள் பணிசெய்து தற்போது ஓய்வு பெற்று தேவகோட்டையில் குடியிருந்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் தெரியும். 1 ம் வாதி அழகு என்பவருக்கும் அவரது மகனுக்கும் பூர்வீக சொத்து தாவா ஊரில் உள்ளது என்றால் சரிதான்.

தாவா வழக்கின் விபரமோ, பிரதிவாதிகளின் விபரமோ தெரியாது பிரதிவாதி அழைத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற அழைப்பாணை வராமல் நீங்களாக சாட்சியம் அளிப்பது ஏற்புடையது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வரப்பு உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1 ம் இலக்க சொத்தில் வாதிகள் விவசாயம் செய்து அனுபவத்தில் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

மானாமதுரை – இராமநாதபுரம் செல்லும் தேதிய நெடுஞ்சாலையில் உள்ள 1 ம் இலக்க சொத்திற்கு 2 ம் இலக்க சொத்து வழியாகத் தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல வரப்பு உள்ளது. உங்களுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சி அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.